# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:146** **தேதி:-25.06.2014**

## தனியாரின் பொதுத்துறை விரோத போக்கும் சில மத்திய சங்க செய்திகளும்

அன்பார்ந்த தோழர்களே,

புதிதாக பொறுப்பேற்ற மத்திய தொலைத் தொடர்பு அமைச்சர் திரு. ரவிசங்கர் பிரசாத் பொதுத்துறை தொலை தொடர்பு நிறுவனங்களான BSNL மற்றும் MTNL ஆகியவற்றை புத்தாக்கம் செய்வதற்கு இந்த அரசாங்கம் முன்னுரிமை வழங்கும் என அறிவித்து இருந்தார். அதற்கு அரசாங்கம் தேவையான கட்டமைப்பு உதவிகளை செய்யும் என்றும் அறிவித்து இருந்தார். தொடர்ந்து அரசின் ஆதரவுடன் பல சலுகைகளை அனுபவித்து வந்த தனியார் நிறுவனங்கள் அமைச்சரின் இந்த அறிவிப்பிற்கு எதிராக ஓலமிட துவங்கி உள்ளனர். CREDIT SUISSE என்கிற ஒரு ஆய்வு நிறுவனம் 'அரசின் உறுதியான ஆதரவுடன் கூடிய ஒரு போட்டியாளர் என்பது இந்த தொழிலுக்கு நல்ல செய்தி அல்ல' என கூறியதாக 22.06.2014 'THE HINDU" பத்திரிக்கை செய்தி சொல்கிறது. இந்த செய்தி தனியார் நிறுவனங்களின் குரல்தானே ஒழிய வேறு ஒன்றுமில்லை. அமைச்சர் தனது வார்த்தைகளில் உறுதியாக நிற்பாரா அல்லது அவரும் தனியார் வலையில் விழப்போகிறாரா என்பதனைப் பொறுத்திருந்து பார்ப்போம்

.

### 30 அம்ச கோரிக்கைகள் மீதான கூட்டம்:-

அனைத்து ஊழியர் சங்கங்களும் இணைந்து உருவாக்கப்பட்ட கூட்டு நடவடிக்கைக்குழுவின் சார்பாக 30 அம்ச கோரிக்கைகள் 09.04.2014 அன்று நிர்வாகத்திடம் கொடுக்கப்பட்டது. இதில் உள்ள பெரும்பாலான கோரிக்கைகள் நீண்ட காலமாக தேங்கிக் கிடக்கும் முக்கிய பிரச்சனைகள். நிர்வாகம், கூட்டு நடவடிக்கைக் குழுவிடம் பேச்சு வார்த்தை நடத்த மாட்டோம் என முடிவு செய்து BSNLEU மற்றும் NFTE (BSNL) ஆகிய இரண்டு சங்கங்களை மட்டும் 27.06.2014 அன்று பேச்சு வார்த்தைக்கு அழைத்துள்ளது. 20.06.2014 அன்று கூடிய BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய மையம் கூட்டு நடவடிக்கைக் குழுவை பேச்சு வார்த்தைக்கு அழைக்கவில்லை எனில் தனியாக நாம் மட்டும் கலந்து கொள்வதில்லை என முடிவு செய்துள்ளது. இதற்கான கடிதத்தை நமது மத்திய சங்கம் நிர்வாகத்திடம் கொடுத்துள்ளது. NFTE சங்கமும் இதே முடிவைத்தான் எடுத்துள்ளதாக தெரிகிறது. 26.06.2014 அன்று மாலை 4 மணிக்கு கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டம் BSNL MS சங்க அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

## தேசியக் கவுன்சிலின் நிலைக்குழுக் கூட்டம்:-

புதியதாக உருவாக்கப்பட்ட நமது தேசிய கவுன்சிலின் நிலைக்குழுவின் கூட்டம் 26.06.2014 அன்று நடைபெற உள்ளது. நமது பொதுச் செயலாளர் தோழர் அபிமன்யு, தலைவர் தோழர்.நம்பூதிரி துணைப் பொது செயலாளர் தோழர்.அனிமேஷ் மித்ரா ஆகியோர் நமது சங்கத்தின் சார்பாக அந்தக்குழுவில் கலந்து கொள்வார்கள். நிர்வாகத் தரப்பில் பொது மேலாளர்(SR), பொது மேலாளர்(ESTT), பொது மேலாளர்(EF) மற்றும் துணை பொது மேலாளர்(SR) ஆகியோர் பங்கேற்பார்கள். அந்தக்குழு தேசிய கவுன்சிலில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அமுலாக்கம் தொடர்பாக பரிசீலிப்பார்கள்.

## யார் அடுத்த BSNL CMD?:-

30 ஜூன் 2014க்கு பின் BSNLன் முறையான CMD யார் என்பது தெரியவில்லை. அடுத்த BSNL CMDயாக மத்திய ஊழல் தடுப்பு ஆணையத்தின் ஒப்புதல் பெற்று பொதுத்துறை நிறுவனங்களுக்கான தேர்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட திரு. அனுபம் ஸ்ரீவத்சவாவின் பெயரை அமைச்சரவையின் நியமனக்குழு ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது. எனினும் மத்திய ஆட்சி மாற்றத்திற்குப்பின் புதிய அமைச்சரின் கருத்துக்களையும் கேட்டு தொலை தொடர்பு துறை திரும்ப அனுப்புமாறு அமைச்சரவையின் நியமனக்குழு கூறியுள்ளது. எனவே தற்போதைய BSNL CMD 30.06.2014 அன்று ஓய்வு பெற்ற பின் BSNLக்கு முறையான CMD இருக்க மாட்டார். BSNLல் உள்ள CMD, இயக்குனர்(HR), இயக்குனர்(FINANCE) ஆகிய பதவிகளை நிரப்புமாறு புதிய அமைச்சருக்கு நமது மத்திய சங்கம் ஏற்கனவே கடிதம் எழுதியுள்ளதை நினைவு கூறுகிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(S.செல்லப்பா)**
**மாநிலச் செயலாளர்.**